பிரசார் பாரதி

அகில இந்தய வானொலி, சென்னை-4

31 08 2026 12 40 செய்தி ஆசிரியர்

திங்கட்கிழமை நண்பகல் ஆர். சிதம்பரநாதன்

ஆகாஷ்வாணி

செய்திகள் - வாசிப்பவர் - லட்சுமி ராகவன்

தலைப்புச் செய்திகள்

1) **உஸ்பெகிஸ்தான் மாணவர்களிடையே தமிழ் கலாச்சாரம் மீதான ஆர்வம் அதிகரித்து வருவது, மகிழ்ச்சியளிப்பதாக, பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

2) நடப்பு நிதியாண்டில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதத்திற்கும் கூடுதலாக நீடிக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3) தமிழகத்தில் ஆவின் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு 44 ரூபாயாக உயர்த்தப்படும் என்று முதலமைச்சர் திரு.விஜய் அறிவித்துள்ளார்.

4) திருக்குறளை உஸ்பெக்கில் மொழி பெயர்க்கும் பணியை முன்னெடுக்க வேண்டுமென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வரவேற்றுள்ளார்.

5) ஹோர்முஸ் நீரிணை பகுதியில் Larak தீவில் அமைந்துள்ள ஈரானிய ராணுவ நிலைகள் மீது, அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உஸ்பெகிஸ்தானின், தாஷ்கென்ட் பல்கலைகழக மாணவர்களிடையே, தமிழ் கலாச்சாரம் மீதான ஆர்வம் அதிகரித்து வருவது, மகிழ்ச்சியளிப்பதாக, பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பல்கலைக்கழகத்தில் உள்ள மகாத்மா காந்தி கல்வி மையத்தை தாம் பார்வையிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசப்பிதா காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை மாணவர்கள் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பை இந்த மையம் வழங்கியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவை பற்றி கற்றுக்கொள்வது உஸ்பெகிஸ்தான் மாணவர்கள் ஆர்வமுடன் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இப்பல்கலைக்கழகத்தில் உள்ள இந்திய கல்விமுறை கட்டமைப்பையும் தாம் பாராட்டுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

திருக்குறளை உஸ்பெக்கில் மொழி பெயர்க்கும் பணியை முன்னெடுக்க வேண்டுமென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், திருக்குரளின் சிறப்பையும், உலகளாவிய முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்து, ஒவ்வொரு தமிழருக்கும் பிரதமர் பெருமை சேர்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழில் எழுதப்பட்ட திருக்குரள் இன்றும் ஆன்மீக தத்துவம் நடைமுறை வாழ்க்கை என அனைத்து துறைகளிலும் உத்வேகத்தை அளித்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டதையும் தமது பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழின் செழுமையையும், திருவள்ளுவரின் பேரறிவையும் உலகெங்கும் கொண்டு செல்லும் முயற்சியை பிரதமர் மேற்கொண்டுள்ளார் என்றும் டாக்டர் எல் முருகன் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7 சதவீத்திற்கும் கூடுதலாக நீடிக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பயணம் மேற்கொண்டுள்ள அவர், சிக்காகோவில், இந்திய வம்சாவளியினர் இடையே உரையாற்றிய உலகளாவிய அரசியல் பிரச்சனைகள் விநியோக சங்கிலி மற்றும் இடர்பாடுகள் உள்ள போதிலும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று அவர் கூறியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணை பகுதியில், போக்குவரத்து பாதிப்புகள் உள்ள போதிலும், இந்தியாவின், முக்கிய பொருட்களான கச்சா எண்ணெய், பெட்ரோலிய பொருட்கள், உரங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியில், பாதிப்பு ஏற்படாது நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

சர்வதேச சந்தையில் உரங்களின் விலை கடுமையாக உயர்ந்த போதிலும், இந்தியாவில் உள்ள விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் குறைந்த விலைக்கே அவை விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

முதலீடுகளை அதிகரிக்க முறையான சீர்த்திருத்த நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாகவும் திருமதி.நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<>>>>

**முன்னாள் குடியரசுத்தலைவர்** பாரத ரத்னா டாக்டர் **பிரணாப் முகர்ஜி-யின் நினைவு தினத்தையொட்டி, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு.அமித் ஷா, புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் பிரணாப் முகர்ஜி சிறந்த நிர்வாகியாகவும், கல்வியாளராகவும் நாட்டுக்கு சேவை செய்யும் உறுதியுடன் செயல்பட்டார் என்றும் கூறியுள்ளார்.

அவரது அரசியல் வாழ்வில், அரசியல் அமைப்பு மாண்புகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார் என்றும் திரு.அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பாரத ரத்னா டாக்டர் பிரணாப் முகர்ஜியின் தேசப்பற்றையும், அறிவாற்றலையும் அனுபவத்தையும் போற்றுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கான சேவையில், அயராத அர்ப்பணிப்பு உணர்வோடு கடமையாற்றியவர் டாக்டர் பிரணாப் முகர்ஜி என்றும் டாக்டர் எல்.முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஆவின் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு 44 ரூபாயாக உயர்த்தப்படும் என்று முதலமைச்சர் திரு.விஜய் அறிவித்துள்ளார்.

விதி 110-ன் கீழ் பேரவையில் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சர் பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று பால் கொள்முதல் விலையை

லிட்டருக்கு 38 ரூபாயிலிருந்து 41 ரூபாயாக ஏற்கெனவே அறிவித்ததை ஏற்று மேலும் 3 ரூபாய் உயர்த்த அரசு முடிவு செய்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பால் கொள்முதல் விலை உயர்வால் அரசுக்கு கூடுதலாக ஆண்டிற்கு 720 கோடி ரூபாய் செலவாகும் என்றும் முதலமைச்சர் திரு.விஜய் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

தமிழகத்தின் காஞ்சிபுரம் மாவட்டம் மதுரமங்கலத்தில், செமி கண்டக்டர் மற்றும் மின்னணுவியல் உற்பத்தி பூங்கா 175 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.விஜய் இன்று சட்டப்பேரவையில் அறிவத்தார்.

பேரவையில், இதற்கான அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சர் கோயமுத்தூரில் டிஜிட்டல் நிதி மையம் மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் பல்முனை சரக்குப்போக்குவரத்து மையம் அமைக்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

**<<<<>>>>**

தமிழக சட்டப்பேரவையில் பேசும் உறுப்பினர்கள் அவையின் மாண்பு மரபு மற்றும் கண்ணியத்தை காக்கும் வகையில் பேச வேண்டும் என்று பேரவைத்தலைவர் திரு. ஜே சி டி பிரபாகர் கேட்டுக்கொண்டார்.

உறுப்பினர்கள் பேசியதை அவை குறிப்பிலிருந்து நீக்கிய பிறகும், ரீல்ஸாக இது சுற்றிவருவதை சில உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

அது தொடர்பாக விரைவில் உரிமை குழு நியமித்ததும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பேரவை தலைவர் தெரிவித்தார்.

இந்த வார இறுதிக்குள் பேரவையின் பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

பொங்கல் பண்டிகைக்கு இலவச வேட்டி சேலை வழங்குவதில் 8 முழ வெளுக்கப்படாத வேட்டிகளுக்கு பதிலாக 4 முழ வேட்டிகளாக உற்பத்தி செய்து வெளுக்கப்பட்ட வேட்டிகளாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று கைத்தறி துறை அமைச்சர் திரு.விஜய் பாலாஜி கூறினார்.

இந்த நிலையை அரசு எடுத்திருப்பதால் நெசவாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வேட்டி சேலைகள் பயனாளிகள் இடையே போதிய வரவேற்பின்மை இருந்ததால் பொதுமக்கள் விரும்பும் வகையில் புதிய ரக வேட்டி சேலைகளை உற்பத்தி செய்து வழங்க அரசு முடிவு செய்திருப்பதாகவும் இன்று பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதில் அளித்த அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

நேபாள வெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தமிழக சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்கு தமிழகத்திலிருந்து 305 பேர் சென்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் 270 பேர் பாதுகாப்பாக உள்ளனர் என்றும், 84 பேரை தொடர்புகொள்ள முடியாத நிலை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களை சந்திக்க அவர்களது குடும்பத்தினர் விரும்பினால், அரசு செலவில் அவர்களை நேபாளம் அழைத்துசெல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு.ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு.நரேந்திர மோடியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சோழர்கால ஆணைமங்கள செப்பேடுகளை விரைவில் தமிழகத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

பேரவையில், இதனை தெரிவித்த அமைச்சர், நாகப்பட்டினத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் புதுப்பிக்கப்பட்டு இந்த செப்பேடுகள் வைக்கப்படும் என்று கூறினார்.

பணிகள் முடிவடைந்தவுடன் இந்த அருங்காட்சியகம் திறந்து வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பூவராயருக்கு மணிமண்டபம் அமைப்பதற்கு மதுரை காந்தி அருங்காட்சியத்தை விரைவில் திறப்பது, தஞ்சையில் உள்ள சோழர் கால அருங்காட்சியக பணிகளை முடிப்பது போன்ற நடவடிக்கைகளை அரசு முழு முயற்சி எடுத்துவருவதாகவும் அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

**<<<<>>>>**

சென்னை மாநகரில் போராட்டம் நடத்தி வரும் தூய்மை பணியாளர்களின் கோரிக்கைகளை படிப்படியாக அரசு நிறைவேற்றி வருவதாக பள்ளி கல்வி மற்றும் செய்திதுறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் இன்று பேரவையில் தெரிவித்துள்ளார்.

தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள், ரைன்கோட் மற்றும் புதிய வாகன வசதிகள் செய்துதரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

**<<<>>>>**

ஹோர்முஸ் நீரிணை பகுதியில் Larak தீவில் அமைந்துள்ள ஈரானிய ராணுவ நிலைகள் மீது, அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரானில் இஸ்லாமிய புரட்சி படைக்கு சொந்தமான இரண்டு ஏவுகனை வாகனங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க ராணுவத்தினர் தெரிவித்தனர்.

ஹோர்முஸ் பகுதியில் வரும் கப்பல்கள் மீது ஏவுகனை தாக்குதல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஈரான் ராணுவம் மேற்கொண்டிருந்ததாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பாக ஈரான் நாட்டு வானொலி விடுத்துள்ள செய்தியில், இச்சம்பவத்தில் ஈரானிய ராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் காயமடைந்ததாகவும், சில உயிரிர்ழப்புகள் நேரிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப், ஈரானுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையில், கன்னிவெடி தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் கப்பல் மற்றும் படகுகள் கண்டறியப்பட்டு அழிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**<<<<>>>>**